# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# செய்தி வெளியீடு

செய்திக் குறிப்பு எண் 51/2021 நாள் 07.10.2021

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு, அருணாச்சல பிரதேச அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி. முபெங் தாதர் பாகே அவர்கள் வருகைபுரிந்து மாண்புமிகு தேர்வாணையத் தலைவர் திரு. கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப.(ஓய்வு) மற்றும் மாண்புமிகு தேர்வாணைய உறுப்பினர்கள் திரு.ச.முனியநாதன்,இ.ஆ.ப.(ஓய்வு), பேராசிரியர் க.ஜோதி சிவஞானம், முனைவர் க.அருள்மதி மற்றும் அருட்பணி ஆ.ராஜ் மரியசூசை ஆகியோரைச் சந்தித்தார். இந்நிகழ்வின் போது தேர்வாணைய செயலாளர் திருமதி. பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப. மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர். அருணாச்சல பிரதேச தேர்வாணைய மாண்புமிகு உறுப்பினருக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பு, சிறப்பு மற்றும் தேர்வு நடைமுறைகள் ஆகியவற்றை தேர்வாணையத்தின் செயலாளர் திருமதி. பி. உமா மகேஸ்வரி , இ.ஆ.ப. மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப. அவர்களும் விளக்கிக் கூறினார்கள். அருணாச்சல பிரதேச மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மாண்புமிகு தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.




திருமதி. பி. உமா மகேஸ்வரி , இ.ஆ.ப

செயலாளர்